இராமநாதபுரத்தில் ஆக.18 அன்று

மீனவர் சங்கங்களின் மாநில மாநாடு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

சென்னை, ஜூலை 27 -

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும், தாக்கப்படுவதையும் கண்டித்து இராமநாதபுரத்தில் ஆகஸ்ட் 18ஆம் தேதி நடைபெறவுள்ள மீனவர் சங்கங்களின் மாநில மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார் என்று மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியைச் சேர்ந்த 9 மீனவர்கள் நெடுந்தீவு பகுதியில் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் (25.7.2023) கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொடர்ந்து கடிதம் மூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வருகிறார்.

இருந்தபோதிலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகிறது. முதலமைச்சர் அவர்கள், கடந்த 20.7.2023 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இந்தியாவிற்கு வருகை தந்த இலங்கை அதிபரிடம், இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்திடவும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவது குறித்தும், கைது செய்யப்படுவது குறித்தும், இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வது குறித்தும் இலங்கை அதிபரை வலியுறுத்திட கேட்டுக்கொண்டார்.

மேலும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பு கொண்டு, தமிழக மீனவர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் குறித்து இந்தியாவிற்கு வருகை தந்த இலங்கை அதிபரிடம் பேச வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்நாட்டின் அனைத்து மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து, தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவது, தாக்கப்படுவது, அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப் படுவது போன்ற நடவடிக்கைகளை கண்டித்தும், அதனை தடுத்திட கோரியும், மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் இராமநாதபுரத்தில் ஆகஸ்ட் மாதம் 18ஆம் தேதி மாநில மாநாடு நடத்தவுள்ளது.

இம்மாநில மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அவர்களின் அழைப்பினை ஏற்று முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் 18ஆம் தேதி இராமநாதபுரத்தில் நடைபெறவுள்ள மீனவர் சங்கங்களின் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளார் என்று மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

முரசொலி கணினிப் பிரிவு பணியாளர் திருமதி கனகலட்சுமியின் தந்தையும் 'கடவுள் அம்பேத்கர் அறக்கோயில்' 'புத்தர் அறிவுலகம்' ஆகியவற்றின் நிர்வாகியுமான ராமச்சந்திரன் (எ) கவிஞர் தமிழ்மறையான் அவர்களின் நினைவேந்தல் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இதில் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் தமிழ்மறையான் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். உடன் திண்டிவனம் ஸ்ரீராமுலு, முன்னணியினர் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.

கோவை - சூலூரில் புலவர் செந்தலை பி.கவுதமன் தலைமையில்

கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்துப் பேரரங்கம்!

தொல். திருமாவளவன் - சசிகாந்த் செந்தில் பங்கேற்பு!

கோவை, ஜூலை 27 -

கோவை - சூலூரில் 36 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் கலை, இலக்கிய, பொது நல அமைப்பான சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் 30.7.2023 ஞாயிறு மாலை 5 மணிக்குச் சூலூர் அறிஞர் அண்ணா சீரணி அரங்கில் நிகழவுள்ளது.

"கலைஞர் கண்ட பெரியார்" எனும் தலைப்பில் தொல். திருமாவளவனும், 'கலைஞர் கண்ட வள்ளுவர்' எனும் தலைப்பில் சசிகாந்த் செந்திலும் 'கலைஞர் கண்ட அம்பேத்கர்' எனும் தலைப்பில் கொளத்தூர் மணியும், 'கலைஞர் கண்ட வள்ளார்' எனும் தலைப்பில் கோவை மு.இராமகிருஷ்ணனும், சொற்பொழிவாற்ற உள்ளனர்.

புலவர் செந்தலை ந.கவுதமன் தலைமையில் நிகழும் இவ்விழாவில் கலைஞர் அவர்களின் படத்தைத் கோவை (தெற்கு) மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் தளபதி முருகேசன் திறந்து வைக்க உள்ளார்.

தூய தமிழ்ப் பெயர் தாங்கிய குழந்தைகளும், சாதி மறுப்பு மத மறுப்பு மணம் புரிந்த மணமக்களும், தமிழில் பெயர்ப் பலகை வைத்துள்ள வணிக நிறுவனங்களும் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பாராட்டிச் சிறப்பிக்கப்பட உள்ளனர்.

தெ. சிவசங்கர் வரவேற்புரையும், சூ.செ.குமரவேல் நன்றியுரையும் வழங்க உள்ளனர்.

மோடி ஆட்சிக்கு எதிராக நாடாளுமன்றத்தில்

நம்பிக்கையில்லா தீர்மானம் தாக்கல்!

'இந்தியா' கூட்டணி கட்சிகள் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜூலை 27-

மணிப்பூர் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க கோரி, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் அளித்தன. இந்த நிலையில் மக்களவை நேற்று முன்தினம் காலை கூடியதும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மணிப்பூர் வன்முறை குறித்து பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் அறிக்கை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார். இதற்கு ஆதரவாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குரல் எழுப்பினர். ஆனால் அதற்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதி மறுத்தார். இதனைத் தொடர்ந்து அவையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டதால், மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது.

தாக்கல்

இதனை அடுத்து நேற்று காலை 'இந்தியா' கூட்டணி கட்சிகள் சார்பில் மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

பந்தல் ஆர்.சிவா இல்லத் திருமண வரவேற்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

தஞ்சை, ஜூலை 27-

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், காவராப்பட்டு ஆர். கருணாநிதி - ஆர்.கே. புவனேஸ்வரி ஆகியோரின் புதல்வர் ஆர். கே. கோபாலுக்கும், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், வடுவூர் வடபாதி ஆர். சிவசுப்பிரமணியன் (எ) பந்தல் ஆர். சிவா - எஸ். செந்தில் குமாரி ஆகியோரின் புதல்வி எஸ். யாஷினிக்கும் திருமண வரவேற்பு இன்று (27.7.2023 வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில் தஞ்சாவூர், திருச்சி மெயின் ரோடு, மஹாராஜா மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இம்மணவிழா வரவேற்பை கழகத் தலைவர் - முதல்வர் மு.க..ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார். இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சித் தலைவர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக முன்னணியினர், நாடாளுமன்ற - சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வார்டு கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை பந்தல் ஆர்.சிவா-செந்தில்குமாரி சிவா ஆகியோர் வரவேற்கின்றனர்.

"கலைஞரும் கலைநயமிக்க மாநாட்டு அரங்கமும்" எனும் தலைப்பில் கண்காட்சி திறப்பு விழா பந்தல் ஆர்.சிவா ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ. எண். 10/2023-24/ தவஅ / நாள் : 20.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023-24-ன் கீழ் விருத்தாசலம் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-049) ஒரு பணிக்கு **இணையவழியில்** இரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.08.2023, 15.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.07.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 3957 /ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ) க&ப வட்டம், விழுப்புரம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
(தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்)
(AN ISO 9001 - 2015 CERTIFIED COMPANY)
தெற்கு சரகம்
எண்.1 ஆய்வாளர் குடியிருப்பு, த. சி. கா 6வது அணி வளாகம், புது நத்தம் சாலை, **மதுரை - 625 014.**
மின் அஞ்சல் : spndengrsc.tnphcl@tn.gov.in தொலைபேசி எண் : 0452 -2903019

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண் : 27 / 2023–2024 நாள் : 21.07.2023

வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு (இடைத்தில்) (2023-2024)
1) மதுரை தெற்கு வெளி வீதி **ஈ.வெ.ரா. நாகம்மையார்** மாநகராட்சி மகளிர் மேல் நிலைப் பள்ளி கட்டடத்தை புதுப்பிக்கும் வேலை	ரூ.159.85 + GST @ 18%
2) திண்டுக்கல் மாவட்டம் **பழனியில்** அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி கட்டடத்தை புதுப்பிக்கும் வேலை	ரூ.144.84 + GST @ 18%
3) நாகப்பட்டினம் மாவட்டம் **நாகப்பட்டினத்தில்** நகராட்சி மகளிர் மேல் நிலைப் பள்ளி கட்டடத்தை புதுப்பிக்கும் வேலை	ரூ.92.93 + GST @ 18%

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு **https://tntenders.gov.in** அணுகவும்
2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாளும் மற்றும் நேரமும் : 08.08.2023 **நண்பகல்** 12.00 **மணி முதல்** 16.08.2023 **மாலை** 06.00 **மணி வரை**
3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 18.08.2023 **காலை 11.15 மணிக்கு**
4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை **www.tnphc.com & www.tnpolice.gov.in** ஆகிய இணையதளங்களில் காணலாம்

கண்காணிப்புப் பொறியாளர், தெற்கு சரகம் /த.நா.கா.வி.வ.க

செ.ம.தொ.இ/3988/ஒப்பந்தப்புள்ளி/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவண்ணாமலை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.13/2023–2024/தவஅ/நாள்–20.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 திருவண்ணாமலை மற்றும் செய்யார் (நெ), க(ம)ப கோட்டங்களைச்** சார்ந்த **3 பணிகளுக்கு** இரு உறை முறையில் இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.08.2023 அன்று 12.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **29.07.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/3947/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (ஒ) க(ம)ப வட்டம், திருவண்ணாமலை

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

கடந்த நிதியாண்டில் மட்டும்

2 லட்சம் கோடி ரூபாய் வாராக்கடன் தள்ளுபடி!

ரிசர்வ் வங்கி அதிர்ச்சித் தகவல்!

புதுடெல்லி, ஜூலை 27-

கடந்த நிதியாண்டில் மட்டும் 2 லட்சம் கோடி ரூபாய் வாராக்கடனை தள்ளுபடி செய்து விட்டதாக, ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது கடும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு வந்ததில் இருந்து பொதுத்துறை வங்கிகளில், நிதி மோசடியில் ஈடுபடும் பெரிய நிறுவனங்களின் கடன் தொகை தள்ளுபடி செய்யப்படுவது கடும் விமர்சனங்களை ஏற்படுத்தி வருகிறது. பா.ஜ.க.அரசு கார்ப்ரேட் நிறுவனங்களுக்கு சாதகமாக செயல்படுவதை மேலும் நிரூபிக்கும் விகையில், ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கை அமைந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்து, ரிசர்வ் வங்கி புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது. அதில், கடந்த 2022-23 நிதியாண்டில் மட்டும் வங்கிகள் 2 லட்சத்து 9 ஆயிரம் கோடி ரூபாய் வாராக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் 10 லட்சத்து 57 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளில் மொத்தம் 15 லட்சத்து 31 ஆயிரம் கோடி கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

மகளிர் நலன் பேணுவதில் தி.மு.க. ஆட்சியை யாரும் மிஞ்சிவிட முடியாது!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 27 -

"மகளிர் நலன் பேணுவதில், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு புதிய திட்டங்களை வகுப்பதில் தி.மு.க. ஆட்சியை யாரும் மிஞ்சிவிட முடியாது" என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 25.7.2023 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:



தினகரன்
ஜூலை 28, 2023 செவ்வாய்க்கிழமை
சொன்னதை செய்தார்
பெண்களுக்கான மாபெரும் சமூக நீதி திட்டத்தின் முன்னெடுப்பாக தமிழகத்தில் கலைஞர் மகளிர் உரிமை தொகை வரும் செப்டம்பர் 15ம் தேதி அண்ணா பிறந்த நாளில் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான விண்ணப்ப பதிவுகளை பெண்களின் ஆரவார வரவேற்போடு நேற்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தர்மபுரி மாவட்டம் தொப்பூரில் தொடங்கி வைத்துள்ளார். தமிழகத்தில் இதுநாள் வரை இப்படி ஒரு பெரிய திட்டம் செயல்பாட்டுக்கு வரவில்லை என உறுதியாக கூறலாம். பிரதிபலன் பார்க்காமல் உழைக்கும் பெண் இனம், இந்த உரிமை தொகையை ஊக்குவிப்பு தொகையாக கூட கொள்ளலாம்.
மகளிர் நலன் பேணி, அவர்கள் வாழ்வாதாரத்திற்கு புதிய திட்டங்களை வகுப்பதில்

பெண்களுக்கான மாபெரும் சமூக நீதி திட்டத்தின் முன்னெடுப்பாக தமிழகத்தில் கலைஞர் மகளிர் உரிமை தொகை வரும் செப்டம்பர் 15ம் தேதி அண்ணா பிறந்த நாளில் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான விண்ணப்ப பதிவுகளை பெண்களின் ஆரவார வரவேற்போடு நேற்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தர்மபுரி மாவட்டம் தொப்பூரில் தொடங்கி வைத்துள்ளார். தமிழகத்தில் இதுநாள் வரை இப்படி ஒரு பெரிய திட்டம் செயல்பாட்டுக்கு வரவில்லை என உறுதியாக கூறலாம். பிரதிபலன் பார்க்காமல் உழைக்கும் பெண் இனம், இந்த உரிமை தொகையை ஊக்குவிப்பு தொகையாக கூட கொள்ளலாம்.

தி.மு.க. ஆட்சியை யாரும் மிஞ்சிவிட முடியாது. 1989ம் ஆண்டு கலைஞர் ஆட்சிக்காலத்தில் தன்னம்பிக்கையோடு பெண்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக மகளிர் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டது. லட்சக்கணக்கான பெண்களின் வாழ்வில் ஒளியேற்றிய இத்திட்டத்தில் இன்று 4.57 லட்சம் மகளிர் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.25 ஆயிரத்து 642 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு சொத்துரிமை என்ற கனவை நனவாக்கியதும் திமுக அரசுதான். தமிழக முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் மகளிர் கட்டணமில்லா பேருந்துகளில் பயணிக்கும் திட்டத்திற்கே முதல் கையெழுத்து இட்டார். இத்திட்டத்தில் தினமும் 36 லட்சம் மகளிர், பேருந்துகளில் இலவசமாக பயணிக்கின்றனர்.

மாணவிகளுக்கும் உயர் கல்வி கண்டிப்பாக கிடைத்திட வேண்டும் என்பதற்காகவே, அரசு பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு கல்லூரிகளில் மாதம்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தை இந்த திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த வரிசையில் முத்தாய்ப்பாக செப்டம்பர் 15ம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமை தொகை பெண்களுக்கு வழங்கப்பட உள்ளது. ஆண்டு வருவாய் 2.5 லட்சத்திற்கு கீழுள்ள 21 வயது நிரம்பிய குடும்ப தலைவிகள் இத்திட்டத்தின் பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின் மூலம் விளிம்பு நிலையில் உள்ள சுமார் ஒரு கோடி பெண்கள் பயன்பெறுவர். இதை செயல்படுத்த இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்தாண்டு ரூ.12 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட உள்ளது.

மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் இத்திட்டத்தின் மூலம் பெண்களுக்கு ஆண்டுதோறும் ரூ.12 ஆயிரம் கிடைக்கும். சிறு சிறு செலவுகளுக்கெல்லாம் பெண்கள் இனி அடுத்தவரை நம்பி வாழ வேண்டிய அவசியமிருக்காது. இத்திட்டத்திற்காக நேற்று தொடங்கிய விண்ணப்ப பதிவு முகாம் வரும் ஆகஸ்ட் 28ம் தேதி வரை நடக்கிறது. அண்ணா பிறந்த நாளில் இந்த புரட்சி திட்டம் கண்டிப்பாக பூக்கும். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் வாக்குறுதியில் இத்திட்டத்தை அறிவித்தபோது 'மாதம் ரூ.1000 பெண்களுக்கு வழங்க முடியுமா' என சிலர் எள்ளி நகையாடினர். சொன்னதை செய்வது தான் திராவிட மாடல் ஆட்சி. அதில் வெற்றி பெறும் முனைப்போடு இன்று முதல்வர் களத்தில் இறங்கிவிட்டார். அண்ணா பிறந்த நாளும், மகளிர் கையில் ரூ.1000 தவழும் நாளும் இதோ விரைவில் வருகிறது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுப் பயணத்திட்டத்தின் கீழ் 59'வது தொகுதியாக மாதவரம் தொகுதியில் அமைந்துள்ள ST.ANNE'S பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களோடு கலந்துரையாடினார். தொடர்ந்து 60'வது தொகுதியாக சங்கர் அவர்களின் திருவொற்றியூர் தொகுதியில் அமைந்துள்ள வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளியிலும் ஆய்வு மேற்கொண்டார்.

மதுரை மாநகர் மாவட்டம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

கழக சட்டதிட்ட விதிகளின்படி, "ஒருவருக்கு ஒரு பொறுப்பு" என்ற அடிப்படையில்;

மாநில தீர்மானக்குழு செயலாளராக நியமிக்கப்பட்ட மதுரை மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த அக்ரி கே.பி.டி. கணேசன் அவர்கள், தான் வகித்து வந்த கே.கே. நகர் பகுதிக் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், அவருக்குப் பதிலாக, திரு. **பி.அறிவுநிதி** (4, ஜீவா ரோடு, குலமங்கலம் மெயின் ரோடு, செல்லூர், மதுரை 2.) அவர்கள் கே.கே. நகர் பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள், இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 25.7.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் 'பெண்ணுரிமையில் கலைஞரின் பங்கு' என்ற தலைப்பில் அமைச்சர் கீதா ஜீவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர் க.குமணன், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் திருமதி நித்யா சுகுமார், ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் திருமதி மலர்க்கொடி குமார், திருமதி ஹேமலதா ஞானசேகர், ஒன்றிய குழு துணை தலைவர் திருமதி திவ்யப்பிரியா இளமது மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கன்னியப்பன், தயாளன், பரசுராமன், ராஜகோபால், வீரராகவன், கமலக்கண்ணன், தட்சிணாமூர்த்தி, வே.திருநாவுக்கரசு உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.